I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.21/2023

**Name** : Gopinathan
**Father/Husband Name** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.06.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 01.15 p.m

**1 மற்றும் 2 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

நான் ஏற்கனவே சாட்சி சொல்லும் போது என் அப்பா எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து வாங்கினார் என்று இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த சர்வே எண்ணில் எவ்வளவு என்றால் என் அப்பா வாங்கியது 1.5 ஏக்கர் அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. நான் படிக்காதவர். 1990 மற்றும் 1996 ல் வாங்கிய சொத்தின் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் ( வா.சா.ஆ. 1 மற்றும் 2) என்றாலும் அதில் எந்த ஆவணத்தில் என் அப்பா சம்பாதித்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டிலும் சொல்லப்பட்டுள்ளது.

மேற்கூறிய விவரங்கள் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வா.சா.ஆ. 1 மற்றும் 2 ல் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் அவைகள் என் அப்பா சம்பாதித்த சொத்து அல்ல என்றாலும் சரியல்ல. நான் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் சாட்சி சொல்லும் போது என் அப்பா சம்பாதித்த 42 செண்ட் 25 செண்ட் மொத்தம் 67 செண்ட் சம்மந்தமாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதற்குரிய சர்வே எண் என்ன என்றால் தெரியாது.

அந்த 22 மற்றும் 45 செண்ட் சம்மந்தப்பட்ட ஆவணத்தை நான் இங்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் A schedule ல் சர்வே எண்ணில் 14 item, B schedule சர்வே எண்ணில் 7 item, C schedule ல் 1 item ஆக மொத்தம் 22 item ல் நான் மேலே கூறிய 45 மற்றும் 22 செண்ட் உள்ளதா பார்த்து சொல்லுங்கள் என்றால் எனக்கு படிக்க தெரியாது எனவே அதை பார்த்து கூற இயலாது. 1,2,3 என்ற எண்கள் தெரியும். அதன் படி சர்வே எண்ணில் 45 மற்றும் 22 என்ற எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

நான் போட்டுள்ள சொத்து நில சம்மந்தப்பட்ட சொத்து என்றால் சரிதான். இந்த நிலத்தில் என்ன பயிர் செய்கிறோம் என்றால் வேர்கடலை மற்றும் மானாவரி பயிர்கள் செய்கிறோம். இன்று வரை என் அப்பா பெயரில் கூட்டு பட்டாவில் தான் உள்ளது என்றாலும் என் பெயரில் தனி பட்டா வாங்கவில்லை என்றாலும் சரிதான். அவரவர்கள் பெயர்களில் தனி பட்டா வாங்க வேண்டும் என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் சொத்திற்கு தனி பட்டா வேண்டும் என்று இது நாள் வரை மனு செய்யவில்லை. இந்த வழக்கில் போட்டுள்ள சர்வே எண்ணில் 45 மற்றும் 22 செண்ட் நிலத்தில் தான் பிரச்சனை என்றாலும் அதில் தான் பாகம் கேட்கிறேன் என்றாலும் சரிதான். 24 items சம்மந்தமாக பிரச்சனை இல்லை என்றால் சரிதான். ஆனால் பாகம் கேட்டுள்ளேன்.

எனக்கு பிரச்சனை இருக்கிற சொத்து 45 மற்றும் 22 செண்ட் சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம பங்கு வேண்டும் என்பதால் போட்டுள்ளேன். என் அப்பா பாக பிரிவினை செய்து கொடுத்தவை தான் என்றாலும் அதை அவர்கள் அவரவர்கள் அனுபவித்து வருகிறோம் என்றாலும் அதன் படி தான் எனக்கு பாகம் வர வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்க வேண்டும் என்று சொன்னாலும் ஆனால் அனைத்து சொத்திலும் பாகம் வேண்டும் என்று கேட்டிருக்க கூடாது என்றாலும் சரியல்ல.

நான் அனுபவித்து வரும் சொத்தின் படி தான் பாக பிரிவினை கேட்டிருக்க வேண்டும் என்றாலும் அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த தாவா அனைத்தும் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். அதில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் 9 வது பாராவில் சொத்து சம்மந்தமாக பெண்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

நான் சொல்லியுள்ள பெண்கள் யார் என்றால் என் மனைவி மற்றும் என் சகோதரர் மனைவி. மேற்படி குடும்ப பெண்களுக்கு என் தந்தையார் பிரித்து கொடுத்த பாகம் குறித்து தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் சகோதரர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அனுப்பியுள்ளேன்.(வா.சா.ஆ. 22). அந்த அறிவிப்பில் என் அப்பாவின் மூதாதையா் சம்பாதித்த சொத்து என்றும் நானும் பிரதிவாதிகளும் சம்பாதித்த சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த அறிவிப்புல் 9 வது பாராவில் நான் பிரதிவாதிகளை அனுகி பாக பிரிவினை கேட்டதாகவும் அதற்கு அவர்கள் மறுத்துவிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்கே கேட்டேன் என்றால் வீட்டில் நேரில் சென்று கேட்டேன். அவ்வாறு அறிவிப்பில் கூறியிருக்கிறனா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் மேற்கண்ட விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று பார்த்து சொல்லுங்கள் என்றால் சாட்சி பிரமாண வாக்குமூலத்தை பார்த்துவிட்டு எதுவும் தெரியவில்லை என்று தெரிவித்தார்.

குடும்ப பெண்களுக்கிடைய பிரச்சனை வீடு சம்மந்தமாகதான் என்றால் ஒருவருக்கு அதிகமாவும் ஒருவருக்கு குறைவாகவும் இருந்ததால் பிரச்சனை

ஏற்பட்டது. இந்த விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பா காசி கவுண்டர் பெயரில் 2 வீடு இருந்தது. அந்த 1 வீட்டில் நானும் 2 வது பிரதிவாதியும் வசித்து வருகிறோம். 1 வது பிரதிவாதி 1 வீட்டில் தனியாக இருக்கிறார். நானும் 2 வது பிரதிவாதி வசிக்கும் வீட்டின் அளவு மற்றும் 2 வது பிரதிவாதி வசிக்கும் வீட்டின் அளவு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நானும் 2 வது பிரதிவாதியும் வசிக்கும் வீட்டின் அளவு கால் இடம் உட்பட 22 செண்ட். 1 வது பிரதிவாதி வசிக்கும் வீட்டின் அளவு காலி நிலம் உட்பட 45 செண்ட். இவ்வாறு அளவுகளை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எந்த ஆவணமும் இல்லாமல் 1 வது பிரதிவாதி அதிகமாக இடம் வைத்துள்ளார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா சொத்தை ஒப்படைக்கும்போது எனக்கு குறைவாக கொடுக்கிறீர்கள் என்றும் 1 வது பிரதிவாதிக்கு அதிகமாக கொடுத்துள்ளீர்கள் என்று என் அப்பாவிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். பாக பிரிவினையை register ஆ செய்து கொடுத்தேன் என்று கேட்டார். அதன் பிறகு சமமாக பிரித்து கொள்ள சட்ட ரீதியாக நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் கேட்டேன். என் அப்பா காலமாகிய பிறகு தான் என் பெரிய அண்ணாவிடம் சென்று கேட்டேன். பெரிய அண்ணன் 1 வது பிரதிவாதி. என் தந்தை இறந்து மறு வருடமே கேட்டேன்.

குடும்ப பெண்களுக்குள் ஏற்பட்ட சாதாரண சண்டைக்காக இந்த பாக பிரிவினை வழக்ககை பொய்யாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. வீட்டு பிரச்சனை சம்மந்தமாக பலமுறை சர்வேயரை வைத்து அளந்தேன் என்றால் சரிதான். அவர்கள் அளவீடு செய்த பிறகும் ஏற்கனவே அப்பா கொடுத்த படி தான் நாங்கள் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

C shcedule ல் 100 Beedi branch நடத்துவதற்கு license உள்ளதா என்றால் இல்லை. அப்பா அவர் பெயரில் நடத்திவந்தாரா என்பதற்கும் ஆவணங்கள் வைக்க வில்லை என்றால் சரிதான். ஆனால் என்னுடைய வேலை

செய்ததற்கான அடையாள அட்டை தான் வைத்துள்ளேன். மேற்படி சொல்லப்பட்டுள்ளபடி No. 1/78 என்ற இடமே என் அப்பாவுக்கோ எனக்கோ பாத்தியப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த C shcedule சம்மந்தமாக வழக்கு போடுவதற்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் போட்டுள்ள வழக்கு, பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே எனக்கும் பிரதிவாதிக்கும் பாக பிரிவினை ஏற்பட்டு தனித்தனியாக அனுபவித்து வருவதால் புதியதாக பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ய அவசியமில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழங்கிய பாகம் குறைவாக உள்ளதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த சர்வே எண்ணில் எவ்வளவு குறைவாக உள்ளது என்ற விவரத்தை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் என் அப்பாவிடம் மற்றும் அண்ணனிடம் கேட்டேன் என்று கூறுவதெல்லாம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கடந்த 20 வருடத்திற்கு மேலாக நான் எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் வசித்து அனுபவித்து வந்துள்ள நிலையில் எனக்கு குறைவாக கொடுத்துவிட்டார்கள் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பலமுறை சர்வேயர் அளவீடு செய்ததற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

வழக்கில் சொல்லியுள்ள சொத்து சம்மந்தமாக ஏற்கனவே பாக பிரிவினை செய்துவிட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு பிராது , முதல் விசாரணை வாக்குமூலம் ஆகியவைகள் முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்தல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 02.00 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.